# திண்டிவனம் நகராட்சி

## சாதாரண கூட்டம்

## முன்னிலை:– திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

09.02.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற **சாதாரண** கூட்டப் பொருள் விபரம்.

**30.01.2024 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் பின்வருமாறு வரிசை எண்.1 முதல் 51 வரை ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்.**

| | |
|---|---|
| **01)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி வார்டு எண்.24, நகரளவை வார்டு–E, பிளாக் எண்.13, நகர புலஎண்.8/9, சர்வே எண்.88/16–ல் நகர் ஊரமைப்பு துறை CSR/DTCP/NO.154/2003–ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அரசின் அனுமதி பெறப்படாமல் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை ஆக்கிரமிப்பானது 08.11.2023ஆம் தேதி காவல்துறை, வருவாய் துறையினரின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு அகற்றும் பணிக்கு ஆகும் தோரய செலவினம் **ரூ.42,000/– (ரூபாய் நாற்பத்து இரண்டாயிரம் மட்டும்)** நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் பொதுநிதியுலிருந்து செலவினம் மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2992/எப்1/2023)<br>**தீர்மானம் எண் : 53, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **02)** | திண்டிவனம் நகராட்சிக்கு எதிராக மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்படும் நகரமைப்பு பிரிவு வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்த வழக்கறிஞர் கட்டணம் வழங்க ஆகும் தோரய செலவினம் ஓராண்டிற்கு ரூ.5,00,000/– (ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.2830/எப்1/2023)<br>**தீர்மானம் எண் : 54, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 03) | மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.B6/2608/2022, நாள்.13.11.2023–இல் தெரிவித்துள்ளவாறு **"உங்கள் தொகுதி முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் ரெட்டணை கிராம பஞ்சாயத்திற்குட்பட்ட, மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் அமைக்க, ரெட்டணை பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் ரெட்டணை கிழக்கு, பட்டா எண்.377, புல எண்.311/1, 311/2–ல் 3.08 Hect, 0.55 Hect பரப்பளவு கொண்ட இடத்தினை மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு நிலமாற்றம் மூலம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேலும், இவ்விடத்தில் திண்டிவனம் நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவைக்கான தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந் நகராட்சியின் நிலை உயர்த்தப்படும் போது, எதிர்கால தேவைக்கான குடிநீர் மற்றும் அத்தியாவசமான தேவைகளுக்கான கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டிய இடம் ஆகும்.<br>எனவே, எதிர்கால அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு ரெட்டணை கிழக்கு வருவாய் கிராமத்திற்குட்பட்ட, பட்டா எண்.377, ஆணையாளர் திண்டிவனம் என வருவாய் பதிவேட்டில் பதிவாகி உள்ள 8 ஏக்கர் 13 சென்ட் (81.300 ச.மீ) இடத்தினை வேறு துறைக்கு மாற்றம் செய்வது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைத்து அதன் விவரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களுக்கு தெரிவித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு :–</u><br>மன்றத்தின் ஒப்புதல் பெற்று அதன் விவரத்தினை தெரிவிக்கலாம்.<br>(ந.க.எண்.3567/2021/எப்1)<br>**தீர்மானம் எண் : 55, நாள் : 09.02.2024**<br>திண்டிவனம் நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவைக்கான தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியின் நிலை உயர்த்தப்படும் போது எதிர்கால தேவைக்கான குடிநீர் மற்றும் அத்தியாவசியமான தேவைகளுக்கான கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டிய இடமாகும். எனவே எதிர்கால அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு ரெட்டணை கிழக்கு வருவாய் கிராமர்ததிற்குட்பட்ட பட்டா எண்.377, ஆணையாளர், திண்டிவனம் என வருவாய் பதிவேட்டில் பதிவாகி உள்ள 8 ஏடக்கர் 13 சென்ட் (81.300 ச.மீ) இடத்தினை வேறு துறைக்கு மாற்றம் செய்ய அனைத்து நகர மன்ற உறுப்பினர்களால் ஏக மனதாக மறுப்பு தெரிவித்ததால் நிராகரிப்பு செய்யப்பட்டது. |
| 04) | திண்டிவனம் நகராட்சி மூலம் திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள நோயாளர் உடனிருப்போர் தங்குவதற்கான சிறப்பு தங்கும் விடுதியினை (Special Shelter) திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் ஏற்கனவே செயல்பட்டு வந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக தாய்சேய் நல கட்டிடம் கட்டப்பட உள்ளதால், பழைய கட்டிடத்தில் செயல்பட்டு வந்த குருதி வங்கி (Blood Bank) மற்றும் சேமிப்பு கிடங்கு (Godown) ஆகியவற்றை மேற்படி, புதியதாக கட்டிடம் கட்டி முடிக்கும் வரை சிறப்பு தங்கும் விடுதியினை 01.11.2023 முதல் ஓராண்டிற்கு காலநீட்டித்து தற்காலிகமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குமாறு அரசு தலைமை மருத்துவமனை முதன்மை குடிமை மருத்துவ அலுவலர், திண்டிவனம் அவர்களின் 21.09.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. இந் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.118, நாள்.14.06.2023–ல் நகராட்சி மூலம் கட்டப்பட்ட நோயாளர் உடனிருப்போர் கட்டிடத்தினை பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | இந்நிலையில் திண்டிவனம் நகராட்சியின் மூலம் கட்டப்பட்டுள்ள நோயாளர் உடனிருப்போர் கட்டிடத்தின் (Special Shelter) தரைதளம் மட்டும் தற்காலிகமாக திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையின் கட்டிட பணிகள் கட்டி முடிக்கும் வரை மருத்துவமனை நிர்வாகம் பயன்படுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3388/2015/எப்1)<br>**தீர்மானம் எண் : 56, நாள் : 09.02.2024**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |
| **05)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவை வார்டு–சி, பிளாக் எண்.18, T.S.NO.22–ல் 08550ச.மீ லோக்கல் பண்ட் ரோடு எனும் இடத்தில் பட்டாசு கடை நடத்திக்கொள்ள அனுமதி கோரப்பட்டு, அவ் இடத்திற்கான அனுமதி கட்டணம் ரூ.15000/– (Other Income – 043/001/1/23–24/0009234 நாள்.22.09.2023) மனுதாரரால் செலுத்தப்பட்டு அனைத்து வரவு இனங்கள் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி, பட்டாசு கடை அமைத்துக் கொள்ள அனுமதியினை ரத்து செய்திட தெரிவித்து, நகர்மன்ற கூட்டத்தில் ஒரு மனதாக தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க அனுமதி ரத்து செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.NO.29689/2023–ல் திண்டிவனம் நகராட்சிக்கு எதிராக மனுதாரர் திரு.K.வெங்கடேச பெருமாள் த/பெ குப்புசாமி, திண்டிவனம் என்பவரால் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி, வழக்கில் பட்டாசு கடை அமைத்திட அனுமதி ரத்து செய்யப்பட்டு, நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளதால் பட்டாசு கடை அனுமதிக்காக செலுத்திய கட்டணம் ரூ.15000/–ஐ இந் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கிதை மன்ற அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2330/எப்1/2023)**<br>**தீர்மானம் எண் : 57, நாள் : 09.02.2024**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |
| **06)** | திண்டிவனம் நகராட்சிக்கு தேவையான எழுதுப் பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், பேரேடுகள், நோட்டீசுகள் 2024–2025ம் நீதி ஆண்டிற்கான வருகைப் பதிவேடுகள் , பிரிவு எழுத்தர்களுக்கான தன் பதிவேடுகள், நிலுவை பதிவேடுகள், குறிப்பு பதிவேடுகள் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான பதிவேடுகள், தேர்தலுக்கு தேவையான மற்றும் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேவையான எழுது பொருட்கள், அரசு கொண்டு வரும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான அறிவிப்பு நோட்டீஸ்கள், பதிவேடுகள் Long Size Noteகள் மற்றும் கணினி வரி வசூல் ரசீதுகள் (1 முதல் 40000 எண்ணிக்கை) A4 Size Paper, Legal Size Paper, வரி வசூல் கேட்பு அறிவிப்பு நோட்டீஸ்கள், வருவாய் உதவியாளர்களுக்கான நாட்குறிப்பு, சொத்துவரி மாதாந்திர பட்டியல் பதிவேடு, பொறியியல் பிரிவுக்கு தேவையான அளவீடு புத்தகங்கள், மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், மற்றும் ஐப்தி நோட்டீஸ் அறிவிப்புகள் நிலுவை வரி விதிப்புதாரர்களிடம் வசூலிக்க தேவையான கேட்பு அறிவிப்புகள், மற்றும் அனைத்து பிரிவு திட்டங்களுக்கும், நிர்வாகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் , ஆகியன கொள்முதல் செய்திட, அரசு அனுமதி பெற்ற கோ–ஆப்– ரேட்டிவ் சொசைட்டி |

| | |
|---|---|
| | நிறுவனத்தாரிடம் கொள்முதல் செய்யவும் மற்றும் 2023–2024ம் ஆண்டின் கூடுதல் செலவினத்திற்கும் சேர்த்து ஆகும் தோராய செலவினம் ரூ.10,00,000/– (ருபாய் பத்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1180/2019/சி2)<br>**தீர்மானம் எண் : 58, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **07)** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் 04.12.2023–ம் தேதிய காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி மிக்ஜாம் புயல் நிவாரண பணிக்கு சென்னை மாநகராட்சியில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுநருடன் கூடிய வாகனத்தை சென்னை மாநகராட்சிக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் 2 துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் 25 தூய்மை பணியாளர்களை மறைமலை நகர் நகராட்சியில் அயற்பணியில் பணி மேற்கொள்ள இந்நகராட்சி 27 பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் உணவு உண்ணும் செலவினத்திற்கு ஒரு பணியாளருக்கு தலா ரூ.2000/– வீதம் ரூ54,000/– வழங்கியதை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.3840/2023/எச்1)<br>**தீர்மானம் எண் : 59, நாள் : 09.02.2024**<br>**பதிவு செய்யப்பட்டது, அனுமதிக்கப்பட்டது.** |
| **08)** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ந.க.எண்.3679/2023/அ3 நாள்.08.11.2023–ம் தேதிய கடிதத்தில் திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) என் குப்பை என் பொறுப்பு மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கு ஒரு கழிவறை, டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிக்கான விழிப்புணர்வுகளை பொதுமக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சிகள் மூலம் நடத்திடவும் கலை நிகழ்ச்சிக்கான செலவு தொகை ரூ.7500/–ஐ (ஒரு நிகழ்ச்சிக்கான தொகை) அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் இந்நகராட்சிக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் 22.12.2023 மற்றும் 23.12.2023 ஆகிய 2 நாட்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த ஆகும் செலவு தொகை ரூ.30,000/– வழங்கியதை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| | **அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.3067/2021/எச்1)<br>**தீர்மானம் எண் : 60, நாள் : 09.02.2024**<br>**பதிவுசெய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.** |
| **09)** | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு மழைக்காலங்களில் பணியினை மேற்கொள்ள பாதுகாப்பு சாதனமான மழை கோட், கையுறைகள், காலுறைகள் (Gumboots) , காலணிகள் மற்றும் இரவு நேரங்களில் தூய்மை பணி மேற்கொள்ளுவதற்காக ஒளிரும் மேல் சட்டை வாங்கி வழங்கி வேண்டியுள்ளதால் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00/- (இரண்டு இலட்சத்திற்கு) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரப்பணிகள் அத்தியாவசியப் பணிகள் என்பதால் பொதுமக்களுக்கு எவ்விதமான தடங்களுமின்றி மழைக்காலங்களில் பணிகள் நடைபெற தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு தேவையான மழை கோட், கையுறைகள், காலுறைகள் (Gumboots), காலணிகள் மற்றும் இரவு நேரங்களில் தூய்மை பணி மேற்கொள்ளுவதற்காக ஒளிரும் மேல் சட்டை வழங்கவும் அதற்காகும் செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3117/2016/எச்1)<br>**தீர்மானம் எண் : 61, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **10)** | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் சரம் என்வீரோ சர்வீசஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் நவம்பர் 2023 முதல் ஜனவரி 2024 வரை ஒப்பந்த அடிப்படையில் 60 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள இந்நகர மன்ற தீர்மான எண் 183, நாள்.29.09.2023 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது மேற்படி ஒப்பந்த காலம் ஜனவரி 2024ல் முடிவடைவதால் எதிர் வரும் பிப்ரவரி 2024 மாதம் 60 நபர்கள் மட்டும் ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. ஒப்பந்தம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.9.00/- இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4144/2022/எச்1)<br>**தீர்மானம் எண் : 62, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**11)** திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை உரிம இனங்களில் ஒன்றான இந்திரா காந்தி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கும் இரவில் தங்கும் பேருந்துகளுக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் C பிரிவு அங்கீகாரம் புதுப்பிக்கப்படாததால், துறை (Departmental Collection) மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இனத்திற்கான ரசீது புத்தகங்கள் தீரும் தருவாயில் உள்ளது. எனவே மேற்கண்ட உரிமம் புதுப்பித்து ஏலம் விடும் வரை துறை மூலம் வசூலிக்கும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இனத்திற்கான ரசீது புத்தககங்கள் வரிசை எண் 1 முதல் 50000 வரை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் அச்சடித்துக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.50000 (ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6052/2014/அ1)

**தீர்மானம் எண் : 63, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

---

**12)** திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் குத்தகை உரிம இனங்களை 2024-2025 முதல் 2026-2027 முடிய மூன்றாண்டு காலத்திற்கு மேற்படி அனுபவிக்கும் உரிமைக்கு குத்தகை கட்டுப்பாட்டு விதிகளின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் இவ்வினங்களுக்கான நிபந்தனைகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் பொது ஏல நிபந்தனைகள் மற்றும் குத்தகை கட்டுப்பாடு விதிகளின்படி அரசிதழில் பிரசுரம் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>ஆண்டு குத்தகை விவரம்</u>**

1. இந்திரா காந்தி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம்.
2. ஆடுவதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் மற்றும் மேற்கண்ட டத்தில் விழும் சானம் அனுபவித்துக் கொள்ளும் உரிமம்
3. இந்திரா காந்தி பேருந்து நிலையத்தில் கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. நேரு வீதியில் ஒ.பி.ஆர் பூங்கா அருகில் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

அ)மீன் கடைகள் -8 எண்ணிக்கை ஆ)கறிக்கடைகள்-8 எண்ணிக்கை இ)காய்கறிகடைகள்- 8 எண்ணிக்கை

5. நகராட்சி சேர்மன் வைத்தியலிங்க முதலியார் காய்கறி நாளங்காடி கடை எண் 14 முதல் 36 முடிய கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4835/2017/அ1)

**தீர்மானம் எண் : 64, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**13)**

திண்டிவனம் நகராட்சியில் கணினி புள்ளி விவரக் குறிப்பாளர் (Data Entry Operator) பணியிடம் தோற்று விக்கப்பட வில்லை. மேலும் கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) திருமதி.ந.தமிழ்செல்வி என்பவரும் மாற்றுப் பணியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று பணிபுரிந்து வருவதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படும் விவரங்களை உடனடியாக தட்டச்சு செய்து அனுப்பவும், அனைத்துப் பிரிவுகளிடமிருந்து பெறப்படும் தபால்கள், கோப்புகள் தட்டச்சு செய்யவும் தற்காலிகமாக ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடமிருந்து கணினி தொழில் நுட்ப பணியாளர் ஒருவரை மாவட்ட ஆட்சியரின் ஷெட்யூல் ரேட்டின்படி நாள் ஒன்றுக்கு ரூ. 850/ – என்ற வீதத்தில் நகர மன்ற தீர்மான எண் 7 நாள். 30.01.2023ல் ஒப்புதல் பெற்று இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண். 210/2023/சி1. நாள். 31.01.2023 மூலம் பிப்ரவரி 2023 முதல் மார்ச் 2024 வரை ஓராண்டுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மேற்படி காலம் முடிவடைய உள்ளதாலும், பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடைபெற உள்ளதாலும், மேற்படி பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு, மேலும் ஓராண்டிற்கு மேற்படி பணியினை மாவட்ட ஆட்சியர் ஷெட்யூல் ரேட் தினக்கூலி ஏற்கனவே அனுமதித்தபடி நாள் ஒன்றுக்கு ரூ.850/– என்ற அடிப்படையில் செய்ய மேற்கண்ட நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் ஒரு பணியாளரை மேலும் ஓராண்டிற்கு காலநீட்டிப்பு செய்து ( ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025) பணியமர்த்திக் கொள்ளவும், தோராய செலவினம் ரூ.3.20 (மூன்று இட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்திற்கு நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 210/2023/சி1)

**தீர்மானம் எண் : 65, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**14)**

இந்நகராட்சியில் துாய்மை பணியாளராகப் பணிபுரிந்து பணியிடையில் 22.06.2022ல் காலமான திருமதி.நாகவள்ளி என்பவரின் சிறப்பு சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகையினை வழங்க கோரி அன்னாரின் வாரிசுதாரரும், மகனுமாகிய திரு.பி.முருகன் என்பவர் 15.03.2023ந் தேதிய விண்ணபத்தின் மூலம் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | 01.02.1988 |
| 2 | பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள்(இறந்த நாள்) | 22.06.2023 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள். |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 30.11.2002 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/– |

| | | |
|---|---|---|
| 6 | வட்டிக்கணக்கீடு (01.12.2002 முதல் 31.05.2022 வரை கணக்கீடப்பட்டுள்ளது) | ரூ.20296/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | -- |
| | **மொத்தம்** | **ரூ.23256/-** |

எனவே, திருமதி.நாகவள்ளி, இறந்த தூய்மை பணியாளர் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.பி.முருகன் என்பவருக்கு அன்னாரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ.2960/-ம், வட்டித் தொகை ரூ.20882/-ம், சேர்த்து ஆக மொத்தம் ரு. 23842/-ஐ திரு.பி.முருகன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1007/2023/பி2)

**தீர்மானம் எண் : 66, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**15)** இந்நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2023ல் ஓய்வுபெற்ற திரு.குபேந்திரன் த/பெ கண்ணன் என்பவரின் சிறப்பு சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகையினை வழங்க கோரி அன்னார் 23.05.2023ந் தேதிய விண்ணபத்தின் மூலம் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | 15.07.1990 |
| 2 | பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் | 30.06.2023 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள். |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 30.11.2002. |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | வட்டிக்கணக்கீடு (01.12.2002 முதல் 30.06.2023 வரை கணக்கீடப்பட்டுள்ளது) | ரூ.22137/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ.10000/- |
| | **மொத்தம்** | **ரூ.35097/-** |

எனவே. திரு.குபேந்திரன் த/பெ கண்ணன், ஓய்வுபெற்ற தூய்மை பணியாளருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ.2960/-ம், வட்டித் தொகை ரூ.22137/-ம், நகராட்சி பங்குத் தொகை ரூ.10000/-மும் சேர்த்து ஆக மொத்தம் ரு. 35097/-ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1809/2023/பி2)

**தீர்மானம் எண் : 67, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**16)**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2023ல் ஓய்வுபெற்ற திருமதி. மேரி க/பெ இராமலிங்கம் என்பவரின் சிறப்பு சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகையினை வழங்க கோரி அன்னார் 23.05.2023ந் தேதிய விண்ணப்பத்தின் மூலம் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | 24.05.1990 |
| 2 | பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாள் | 30.06.2023 |
| 3 | சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநலநிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 30.09.2002 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | வட்டிக்கணக்கீடு (01.12.2002 முதல் 30.06.2023 வரை கணக்கீடப்பட்டுள்ளது) | ரூ.22137/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ.10000/- |
| | **மொத்தம்** | **ரூ.35097/-** |

எனவே. திருமதி. மேரி க/பெ இராமலிங்கம், ஓய்வுபெற்ற தூய்மை பணியாளர் என்பவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ.2960/-ம், வட்டித் தொகை ரூ.22137/-ம், நகராட்சி பங்குத் தொகை ரூ.10000/-மும் சேர்த்து ஆக மொத்தம் ரு. 35097/-ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம். (ந.க.எண்.1810/2023/பி2)

**தீர்மானம் எண் : 68, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

**17)**

மாவட்ட ஆட்சித் தலைவர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 3/E -1187541/2023 நாள் :05.01.2024 ம் தேதிய கடிதத்தில் அரசாணை (நிலை) எண் 130,பள்ளிக் கல்வி (பெ.து.2)துறை நாள் .25.07.2023-ன் படி ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்தக திருவிழா நடத்திட தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் புத்தக திருவிழா 2023-24-ம் ஆண்டிற்கு 02.02.2024 முதல் 11.02.2024 வரை புத்தக திருவிழா நடைபெற உள்ளதாகவும் புத்தக வாசிப்பை அனைத்து தரப்பு மக்களிடம் கொண்டு செல்ல முன்னெடுக்கும் முயற்சிக்கான செயல்படுத்தும் விதமாக புத்தக திருவிழாவிற்கு துறை வாரியாக பங்களிப்பு தொகை வழங்க கோரியும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி திண்டிவனம் நகராட்சிக்கு பங்கு தொகையாக ரூ.2,50,000/-( எழுத்தால் ரூ. இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, கல்வி நிதியிலிருந்து செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள;ப்பட்டுள்ளதை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 239/2024/அ4)

**தீர்மானம் எண் : 69, நாள் : 09.02.2024**

**பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 18) | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20800/2021/யுபிஏ நாள்.06.02.2023ல் இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) ன் கீழ் கட்டப்பட்டுள்ள நோயாளிகளுடன் வரும் உதவியாளர் தங்கும் இடமான சிறப்பு தங்கும் விடுதிக்கு தேவையான கூடுதல் உபகரணங்கள் ரூ.849190/– மதிப்பீட்டில் வாங்குவதற்கு செலவினத் தொகை விடுவித்து வரப்பெற்றுள்ள கடிதத்தினையும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3388/2016/இ1)<br>**தீர்மானம் எண் : 70, நாள் : 09.02.2024**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| 19) | தேசிய நகர்புற சுகாதார இயக்கம் 2023–2024ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட சேடன் குட்டை பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க குழும இயக்குநர், தேசிய சுகாதாரக் குழுமம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1869/NUHM/SHS/2015, நாள்.03.08.2023ல் தேர்வு செய்யப்பட்டது துணை இயக்குநர் சுகாதார பணிகள் விழுப்புரம் மற்றும் சார் ஆட்சியர் திண்டிவனம் ஆகியோர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடத்தில் போதிய இட வசதி இல்லாததால் மாற்று இடம் ஆய்வு செய்யப்பட்டதில் அவரப்பாக்கம் புல எண்.39, பாரதிதாசன் பேட்டையில் துணை சுகாதாரநிலையம் அமைக்க சார் ஆட்சியர் திண்டிவனம் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்.4068/அ6/2023, நாள்.30.10.2023ல் குழும இயக்குநர், தேசிய சுகாதாரக் குழுமம், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டது. குழும இயக்குநர், தேசிய சுகாதாரக் குழுமம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1869/NUHM/SHS/2015, நாள்.04.11.2023ல் இந்நகராட்சிக்குட்பட்ட அவரப்பாக்கம் புல எண்.39, பாரதிதாசன் பேட்டையில் துணை சுகாதார நிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது.மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25875/2023/EA–2, நாள்.01.12.2023ல் மேற்கண்ட பணியினை செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவரப்பாக்கம் புல எண்.39, பாரதிதாசன் பேட்டையில் துணை சுகாதார நிலையம் அமைக்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.2806/2023/இ1)<br>**தீர்மானம் எண் : 71, நாள் : 09.02.2024**<br>**<u>நிராகரிக்கப்பட்டது.</u>** |
| 20) | திண்டிவனம் நகராட்சிக்கு 2018–2019 மற்றும் 2020–2021ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வாங்கப்பட்ட பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்கள் தற்போது பழுதாகி நின்று விட்டதை பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4495/2023/இ1)<br>**தீர்மானம் எண் : 72, நாள் : 09.02.2024, அனுமதிக்கப்பட்டது.** |

**21)** இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2023–2024ன் கீழ் வார்டு எண்.4, ரோஷனை பகுதியில் சமுதாய கூடம் அமைக்க இதற்கு தேவையான விரிவான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்து உரிய தொழில் நுட்ப அனுமதி பெறுதல் மற்றும் இதர அனுமதிகள் பெறுதலுக்கு கலந்தாலோசகரை நியமித்தல் பணிக்கு 1.50 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

2. மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1483/2023/இ1)

**தீர்மானம் எண் : 73, நாள் : 09.02.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

---

**22)** இந்நகராட்சியில் **நாடாளுமன்ற உறுப்பினர் (ராஜ்யசபா) உள்ளூர் வளர்ச்சி திட்டம்–2023–2024ன்** கீழ் வால்டர் ஸ்கடர் மேல்நிலை பள்ளியிக்கு சுற்றுசுவர், விளையாட்டு மைதானம் மற்றும் நடைபாதை அமைத்தல் பணிக்கு 28.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் விழுப்புரம் அவர்கள் மூலம் தினசரி தமிழ் நாளிதழில் 13.12.2023 அன்று வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு விளம்பர கட்டணமாக ரூ.18900.00–ஐ வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளபடுபடுவதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 3555/2023/இ1)

**தீர்மானம் எண் : 74, நாள் : 09.02.2024**

**பதிவு செய்யப்பட்டது.**

---

**23)** மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.ஆ.எண்.ஆ6/2437/2023, நாள்.06.12.2023 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023–2024 திரு.சி.வி.சண்முகம் நாடாளுமன்ற உறுப்பினர் (ராஜ்யசபா) அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திண்டிவனம் வால்டர் ஸ்கடர் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுசுவர், விளையாட்டு மைதானம் மற்றும் நடைபாதை அமைத்தல் பணி. | 25.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற நிர்வாக அனுமதியையும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுலக குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3555/2023/இ1)<br>**தீர்மானம் எண் : 75, நாள் : 09.02.2024**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| **24)** | இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பொது மக்களின் நலன்கருதி நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க பின்வரும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பின்வரும் பணிகளுக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி 2023-2024ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| **வ. எண்** | **வார்டு எண்** | **பணிகளின் விவரம்** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| | | **கல்வி நிதி - 2023-2024** | |
| 1 | 11 | வார்டு எண்.11ல் காவேரிப்பாக்கம் பள்ளியின் கட்டிடத்திற்கு Weathering course, Tiles பதித்தல் பணி. | 7.00 |
| | | **மொத்தம்** | **7.00** |
| | | **வருவாய் நிதி - 2023-2024** | |
| 2 | - | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 15 கழிப்பறைகளை பராமரிப்பு செய்தல் பணி. | 15.00 |
| 3 | - | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட நுண்ணிய உரமாக்கும் மையம் 2, 3 மற்றும் 4 பராமரித்தல் பணி. | 10.00 |
| 4 | - | வார்டு எண். 1 முதல் 33 வார்டுகளில் வடகிழக்கு பருவமழையால் சேதமான சாலைகளுக்கு தற்காலிகமாக நெரம்பு மற்றும் வெட்மிக்ஸ் மூலம் சரிபார்த்தல் பணி. | 5.00 |
| 5 | - | திண்டிவனம் நகராட்சி ஆணையர் குடியிருப்பு மராமத்து பணிகளை மேற்கொள்ளுதல் பணி. | 3.00 |
| 6 | 1 | வார்டு எண்.1ல் உயர் மின் கோபுர விளக்குகளில் உள்ள LED பல்புகள் மாற்றியமைத்தல் மற்றும் மோட்டார் பழுது பார்த்தல் பணி. | 1.50 |
| 7 | 1 | வார்டு எண்.1ல் காந்தி நகரில் உள்ள வண்ணாங்குட்டை பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.00 |
| 8 | 3 | வார்டு எண்.3ல் பாஞ்சாலியம்மன் கோவில் மற்றும் மாரிகுளம் தெருவிற்கு சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 9 | 3 | வார்டு எண்.3ல் பாஞ்சாலம் ரோடு கோவிந்தன் வீடு அருகில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.00 |
| 10 | 5 | வார்டு எண்.5ல் ரோஷனை ரோடு, பிள்ளையார் கோயில் சந்திப்பில் சிறுபாலம் மராமத்துப்பணி பார்த்தல். | 2.00 |
| 11 | 5 | வார்டு எண்.5ல் ரோஷனை, பிள்ளையார் கோயில் தெருவில் மழை நீர் வடிகால்வாய் 400 மீட்டர் நீளம் அமைத்தல் பணி. | 16.00 |
| 12 | 5 | வார்டு எண்.5ல் ரோஷனை ரோடு, கெங்கையம்மன் கோயில் உள்ள சிறுபாலம் மறு சீரமைப்பு பணிகள். | 1.50 |

| | | | |
|---|---|---|---|
| 13 | 7 | வார்டு எண்.7ல் காளிமான் கொள்ளை தெருவில் வெள்ளவாரி வாய்க்காலிற்கு பாலம் அமைத்தல் பணி. | 20.00 |
| 14 | 7 | வார்டு எண்.7ல் ஸ்கடர் நகர் 1வது தெருவில் மழை நீர் கால்வாய் 130 மீட்டர் அமைத்தல் பணி. | 5.50 |
| 15 | 3 | மருத்துவமனை சாலையில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி முன்பு உள்ள மழைநீர் வடிகால்வாய்களின் மேல் RCC சிலாப் அமைத்தல் பணி. | 2.00 |
| 16 | 8 | வார்டு எண்.8ல் மருத்துவமணை சாலை, மாரியம்மன் கோவில் சந்திப்பில் 8 மீட்டர் நீளத்திற்கு சிறுபாளம் அமைத்தல் பணி. | 2.30 |
| 17 | 8 | வார்டு எண்.8ல் அப்புக்குட்டி தெருவில் 7.5 மீட்டர் நீளத்திற்கு சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.20 |
| 18 | 8 | வார்டு எண்.8ல் அய்யுலு தெருவில் 5 மீட்டர் நீளத்திற்கு சிறுபாலம் மற்றும் 75 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 4.70 |
| 19 | 8 | வார்டு எண்.8ல் அய்யாசாமி தெருவில் 9 மீட்டர் நீளத்திற்கு சிறுபாலம் மற்றும் 25 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 3.50 |
| 20 | 9 | வார்டு எண்.9, ஏகாம்பரம் பிள்ளை தெருவில் 3 சிறுபாலங்கள் மறு சீரமைப்பு செய்தல் பணி.<br>(4 மீட்டர் நீளம் இரண்டு மற்றும் 6 மீட்டர் நீளம்) | 5.00 |
| 21 | 9 | வார்டு எண்.9, சீனிவாசன் தெரு மற்றும் அய்யாசாமி தெருவில் உடைந்த சின்டெக்ஸ் டேங்க் மாற்றி அமைத்தல் பணி. | 1.50 |
| 22 | 10 | வார்டு எண்.10ல் ராமதாஸ் நகரில் மழை நீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. (200 மீட்டர்) | 10.00 |
| 23 | 10 | வார்டு எண்.10ல் TMG நகரில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 4.50 |
| 24 | 12 | வார்டு எண்.12ல் கிருஷ்ணபிள்ளை தெருவில் இருபுரமும் கால்வாய் அமைத்தல் பணி. | 8.00 |
| 25 | 12 | வார்டு எண்.12ல் திருவள்ளுவர் தெருவில் புதிய சிறுபாலம் | 1.50 |
| 26 | 13 | வார்டு எண்.13ல் செஞ்சி ரோடு மற்றும் காந்தி சிலை பகுதிகளில் உள்ள உயர் மின் கோபுரங்கள் பழுது மற்றும் பராமரிப்பு பணி. | 2.00 |
| 27 | 13 | வார்டு எண்.13ல் பஞ்சநாதன் தெருவில் இருபுறமும் உள்ள மழைநீர் கால்வாய் பராமரிப்பு பணி. | 9.00 |
| 28 | 14 | வார்டு எண்.14ல் பெலாகுப்பம் ரோடு, அன்புநகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 8.00 |
| 29 | 14 | வார்டு எண்.14ல் எம்.ஜி.ஆர் நகரில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 7.00 |
| 30 | 15 | வார்டு எண்.15ல் மூகாம்பிகை நகர் பகுதியில் மழை நீர் கால்வாய் அமைத்தல் பணி. | 10.00 |
| 31 | 16 | வார்டு எண்.16ல் சஞ்சீவிராயன் பேட்டை 6வது, 7வது தெருக்களில் புதிய சிறுபாலம் அமைத்தல் பணி. | 3.00 |

| | | | |
|---|---|---|---|
| 32 | 16 | வார்டு எண்.16ல் உழவர் சந்தை அருகில் 6 மீட்டர் நீளம் உள்ள சிறுபாலம் மறு சீரமைத்தல் பணி. | 2.50 |
| 33 | 17 | வார்டு எண்.17ல், ராஜங்குளம் அருகில் கரும காரிய மண்டபம் அமைத்தல் பணி. | 12.00 |
| 34 | 18 | திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் ஈப்பு வாகனங்களை நிறுத்துவதற்கு செட் அமைத்தல் பணி. | 3.00 |
| 35 | 19 | வார்டு எண்.19ல், கீரகார தெரு, விவேகானந்தர் தெரு, புதுமசூதி தெரு மற்றும் பாரதிதாசன் தெருக்களுக்கு குடிநீர் குழாய் அமைத்தல் பணி. | 2.50 |
| 36 | 20 | வார்டு எண்.20ல், காவேரிப்பாக்கம், சுப்புராயன் தெருவில் சிறு பாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 37 | 22 | வார்டு எண்.22ல், ஆர்.சி.காம்பவுண்ட் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 38 | 23 | வார்டு எண்.23ல், மரவாடியான் தெருவிற்கு மழை நீர் கால்வாய் அமைத்தல் பணி. | 1.50 |
| 39 | 24 | வார்டு எண்.24ல், காமராஜர் நகர் பகுதி மகாத்மா காந்தி நகர் (ஈவேரா பெரியார்) ராம் நகர் ஆகிய 3 பகுதிகளில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 6.00 |
| 40 | 25/33 | வார்டு எண்.25 மற்றும் 33ல் ஜெயபுரம் 4வது தெருவிலிருந்து கர்ணாவூர் பாட்டை ஓடை வரை மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 10.00 |
| 41 | 26 | வார்டு எண்.26ல் நாகலாபுரம் மெயின் ரோட்டில் அரச மரம் அருகே சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.00 |
| 42 | 27 | வார்டு எண்.27 கசாமியான் தெருவில் சிறுபாலம் பராமரிப்பு செய்தல் பணி. | 1.50 |
| 43 | 27 | வார்டு எண்.27 பூந்தோட்டம் முதல் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 4.00 |
| 44 | 28 | வார்டு எண்.28, சஞ்சீவிராயன்பேட்டை 1வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. (200 மீட்டர்) | 8.00 |
| 45 | 28 | வார்டு எண்.28, வள்ளலார் தெரு மற்றும் சிந்து நகர் பகுதியில் சிறு பாலம் அமைத்தல் பணி. | 3.00 |
| 46 | 29 | வார்டு எண்.29ல் இந்திராகாந்தி பேருந்து நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலத்திற்கு கீழ் உள்ள கால்வாயை சரி செய்யவும், அனுகுசாலையை சீர் செய்யதல் பணி. | 2.50 |
| 47 | 29 | வார்டு எண்.29ல் பாரதிதாசன் பேட்டையில் மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 6.50 |
| 48 | 31 | வார்டு எண்.31, பூதேரி பிரதான சாலையில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 49 | 31 | வார்டு எண்.31, பூதேரி பிள்ளையார் கோவில் தெருவில் மழை நீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல் பணி. | 5.00 |
| 50 | 32 | வார்டு எண்.32, மயிலம் ரோடு இந்திரா நகரில் உள்ள பிரதான மழைநீர் கால்வாய் தூர் வாருதல் பணி. | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 51 | 33 | வார்டு எண்.33ல் உமாபதி தெரு விரிவாக்கம் பகுதி –I க்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. ( 100 மீட்டர்) | 4.50 |
| 52 | 33 | வார்டு எண்.33ல் உமாபதி தெரு விரிவாக்கம் பகுதி –II க்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. ( 120 மீட்டர்) | 5.50 |
| 53 | 33 | வார்டு எண்.33ல் மயிலம் ரோடு இந்திரா நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 8.00 |
| | | **மொத்தம்** | **271.70** |
| | | **குடிநீர் நிதி – 2023–2024** | |
| 54 | 1 | வார்டு எண்.1ல் சந்தை மேடு பா.உ.சண்முகம் நகரில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி. | 2.00 |
| 55 | 2 | வார்டு எண்.2ல் அய்யந்தோப்பு குளம் அருகே பழுதான மின் மோட்டார் ரூம் இடித்துவிட்டு புதிய பம்பு ரூம் அமைத்தல் பணி. | 1.00 |
| 56 | 4 | வார்டு எண்.4ல் குட்டைகரை மருத்துவமணை சாலை புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி. | 2.50 |
| 57 | 6 | வார்டு எண்.6, ரோஷனை பாட்டையில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி. (பள்ளி அருகில்) | 2.50 |
| 58 | 9 | வார்டு எண்.09, ஏரி கோடி தெருவில் சிறு மின் விசை பழுதான மோட்டார் ரூம் இடித்து விட்டு புதிய பம்பு ரூம் அமைத்தல் பணி. | 1.00 |
| 59 | 9 | வார்டு எண்.9, ஏகாம்பரம் பிள்ளை தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி. | 2.30 |
| 60 | 17 | வார்டு எண்.17, மீர்நாசர் அலி தருவில் ஏர்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி. | 2.00 |
| 61 | 18 | வார்டு எண்.18ல் அழகப்பா தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி. | 2.00 |
| 62 | 20 | வார்டு எண்.20ல் நத்தமேட்டில் உள்ள கிணறுக்கு மேல் மூடி, மற்றும் பராமரிப்பு செய்தல் பணி. | 1.50 |
| 63 | 20 | வார்டு எண்.20ல் நரிகுறவர் காலனியில் சிறுமின்விசை மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி. | 2.50 |
| 64 | 21 | வார்டு எண்.20ல் அம்பேத்கர் தெருவில் சிறு மின் விசை பழுதான மோட்டார் ரூமை இடித்து விட்டு புதிய பம்பு ரூம் அமைத்தல் பணி. | 1.00 |
| 65 | 22 | வார்டு எண்.22ல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் நிதியின் கீழ் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு கழிப்பறை மற்றும் புதிய போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணி. | 3.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 66 | 24 | வார்டு எண்.24ல், இந்திரா நகர், பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி. | 2.00 |
| | 67 | 27 | வார்டு எண்.27ல் பூந்தோட்டம் முதல் தெருவில் உள்ள சிறுமின் விசை மோட்டர் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் மாற்றி அமைத்து பராமரிப்பு செய்தல் பணி. | 1.00 |
| | 68 | 27 | வார்டு எண்.27ல் பெரியசாமி பிள்ளை தெருவில் சிறு மின் விசை பழுதான மோட்டார் ரூமை இடித்து விட்டு புதிய பம்பு ரூம் அமைத்தல் பணி. | 1.00 |
| | 69 | 28 | வார்டு எண்.28ல் குள்ளன் குட்டையில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங் அமைத்தல் பணி. | 2.00 |
| | 70 | 31 | வார்டு எண்.31ல் பவானி நகர், முருகன் கோயில் குறுக்குத் தெருவிற்கு பகிர்மான குழாய்கள் அமைத்தல் பணி. | 3.50 |
| | 71 | 30 | வார்டு எண்.30ல் கரும காரிய மண்டபத்திற்கு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணி. | 1.50 |
| | 72 | – | காட்ராம்பாக்கம் நீருந்து நிலையத்திலிருந்து திண்டிவனம் நகருக்கு வரும் பிரதான குடிநீர் குழாயில் உள்ள பழுதான Air Valve 10 எண்ணிக்கை மற்றும் NRV Valve 4 எண்ணிக்கை மாற்றுதல் பணி. | 5.00 |
| | 73 | – | காட்ராம்பாக்கம், ரெட்டணை, இறையானூர் ஆகிய நீர் உந்து நிலையங்களில் அவ்வபோது ஏற்படும் பழுதுகள் மற்றும் பிரதான குடிநீர் குழாயில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்யும் பணி. (2024–2025) | 5.00 |
| | | | **மொத்தம்** | **44.30** |
| | | | **ஒட்டு மொத்தம்** | **323.00** |

**<u>அலுவலககுறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.23857/2023/எம்ஏ1, நாள்.24.11.2023ம் தேதிய சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்ட தற்கிணங்க உரிய அனுமதி பெற்று மேற்காணும் பணிகளை நகராட்சியின் நிதி நிலைமையினை பொருத்து படிப்படியாக மேற்கொள்ளப்படும் (ந.க.எண். 3745/2023/ இ1)

**தீர்மானம் எண் : 76, நாள் : 09.02.2024**

**<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**25)** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே சென்று நிவர்த்தி செய்யும் பொருட்டு மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு முகாம்கள் அமைத்து அதன் மூலம் மக்களிடம் மனுக்களை பெற்று குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு நிவர்த்தி செய்ய அரசாணை (நிலை) எண்.760 14.12.2023 மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.colrev/4054/2023–E1, நாள்.14.12.2023–ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி திண்டிவனம் நகராட்சியின் மூலம் கீழ்காணும் விவரப்படியான 6 முகாம்கள் அமைக்கப்பட்டு

பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | வார்டு விபரம் | முகாம் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள் | திருத்தியமைக்கப்பட்ட தேதி / கிழமை |
|---|---|---|---|
| 1 | 01, 06, 14, 15, 16, 28 | மைலம் முருகன் திருமண மண்டபம், செஞ்சி ரோடு, திண்டிவனம் (வார்டு எண்.14) | 19.12.2023 செவ்வாய் கிழமை |
| 2 | 08, 09, 17, 18, 19, 27 | MRS லட்சுமி மஹால் திருமண மண்டபம், தீர்த்தகுளம், திண்டிவனம் (வார்டு எண்.09) | 21.12.2023 வியாழன் கிழமை |
| 3 | 10, 11, 20, 21, 22 | KRS அம்மா மஹால் திருமண மண்டபம், சென்னை ரோடு, திண்டிவனம்.(வார்டு எண்.11) | 27.12.2023 புதன் கிழமை |
| 4 | 2, 3, 4, 5, 7, 12, 13 | விமலா வாசுதேவன் திருமண மண்டபம், தீர்த்தகுளம், திண்டிவனம் (வார்டு எண்.09) | 28.12.2023 வியாழன் கிழமை |
| 5 | 23, 24, 25,2 6 | DKP திருமண மண்டபம், மரக்காணம் ரோடு, திண்டிவனம் (வார்டு எண்.23) | 03.01.2024 புதன் கிழமை |
| 6 | 29, 30, 31, 32, 33 | JVS திருமண மண்டபம், மைலம் ரோடு, திண்டிவனம் (வார்டு எண்.32) | 05.01.2024 வெள்ளி கிழமை |

இம்முகாம்களில் பொதுமக்களிடம் மனுக்களை பெற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையுடன் இணைந்து பிற துறைகளான எரிசக்தித் துறை / தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, காவல் துறை, மாற்றுத் திறனாளிகள் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை / ஆதிதிராவிட நலத்துறை / பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை / கூட்டுறவுத் துறை ஆகிய துறை அலுவலர்களும் கலந்துக்கொள்ள உள்ளதாலும் இம்முகாம் நடைபெறுவதற்கான திருமண மண்டபம், பொதுமக்கள் அமர்வதற்கான இருக்கை வசதிகள், கலந்துகொள்ளும் அலுவலர்களுக்கான உணவு, தேநீர், பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ விளம்பரம், பிளக்ஸ் பேனர் மற்றும் துண்டு பிரசுரம், சாமியான பந்தல் மற்றும் பொதுமக்கள் துறைவாரியாக மனுக்களை அளிக்க துறைவாரியாக கேபின்கள் அமைப்பதற்கும் அதற்கான செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலககுறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.4041/2023/இ1)**<br>**தீர்மானம் எண் : 77, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **26)** | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-2021 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பழைய வார்டு எண்.18 புதிய வார்டு எண்.22 மாதா கோவில் தெருவில் அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம் மற்றும் பழைய வார்டு எண்.20 புதிய வார்டு எண்.23 காமராஜர் நகரில் டேங்க் சிமெண்ட் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகிய பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/ பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ஆ6/841/2020 நாள்.17.02.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 15.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 08.07.2021 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்கண்ட முதல் பணிக்கு முதல் பட்டியல் தொகை ரூ. 552146 02.12.2021 அன்று ஒப்பந்ததாரர் திரு.மு.தமிழ்வாணன் என்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இரண்டாவது பட்டியல் தொகை ரூ.447310-ம் காமராஜர் நகரில் டேங்க் சிமெண்ட் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சமும் வழங்கப்படவேண்டிய நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4910/2020/எல்2, நாள்.25.03.2022ல் தெரிவித்ததற்கிணங்க இந்நகராட்சியில் செயல்படுத்தப்படாத வங்கி கணக்கில் உள்ள இருப்பு தொகைகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கு வங்கியில் உள்ள இருப்பு தொகைகள் ஆகியவற்றை (Ongoing scheme) அரசு கணக்கில் Public Finance & MAWS/DMA சென்னை, கனரா வங்கி கணக்கு எண் 110043176044-ல் ரூ. 10,14,138.00 நாள்.13.04.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளுக்கான தொகையினை வழங்க, இயலவில்லை மேற்படி தொகையினை விடுவிக்க கோரி இவ்வலுவலகம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு 01.11.2023 அன்று கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட பணியினை செய்து முடித்து ஒப்பந்ததாரர் பட்டியல் தொகையினை வழங்க தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார் எனவே, மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து தொகை விடுவிக்கப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3582/2017/இ1**<br>**தீர்மானம் எண் : 78, நாள் : 09.02.2024**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**27)**

இந்நகராட்சியில் பின்வரும் பணிக்கு 15.12.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

